## சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களில் தமிழ் வழியில் பயின்று தேர்ச்சி பெற்ற சிறந்த மாணவர்களுக்கான பெருந்தலைவர் காமராஜர் விருது வழங்கி மாணவர்களின் கல்வி மற்றும் தனித் திறன்களை ஊக்குவிக்கும் திட்டம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை

அரசாணை (நிலை) எண்.190

நாள் : 18. 08.2017.
திருவள்ளுவர் ஆண்டு , 2048
ஹேவிளம்பி வருடம், ஆவணி–2

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண். 156, பள்ளிக் கல்வி (வி1) துறை நாள் 03.7.2009.
2. அரசாணை (நிலை) எண். 91, பள்ளிக் கல்வி (ஜிஇ(1) துறை நாள் 11.5.2017.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 47819/ கே/ இ3/2017, நாள் 13.7.2017.

------

ஆணை :–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேல்நிலைக் கல்வி இறுதித் தேர்வு மற்றும் இடைநிலைக் கல்வி இறுதித் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகை அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

2. பின்னர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கற்றல் என்பது தெரிந்து கொள்ளுதல், அறிந்து கொள்ளுதல், வினவுதல், பயன்படுத்துதல், மற்றும் புதியன படைத்தல் எனப் பல நிலைகளில் நடைபெறும் ஒரு செயல்பாடாகும் என்பதால் இதில் எழுத்துத் தேர்வில் எடுக்கப்படும் மதிப்பெண்களுக்கு மட்டும் அதீத முக்கியத்துவம் அளிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் மாநில மற்றும் மாவட்ட அளவில் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறை கைவிடப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3. தற்போது மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வித் இயக்குநரின் கடிதத்தில், மாவட்டந்தோறும் கல்விச் செயல்பாடுகள் உள்ளிட்ட பிற தனித்திறன்கள் உடைய தமிழ் வழியில் பயிலும் சிறந்த மாணவர்களை கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் வகையில், கீழ்க்காணும் செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்:–

i. மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் குறைந்தபட்சம் 60 சதவிகித மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள

வேண்டும். மேலும் கீழ்கிண்ட தனித்திறன்கள் அடிப்படையில் 40 விழுக்காடு ச
எடுத்துக் கொண்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

அ) நடிப்பு, கிராமிய நடனம், இசைக் கருவிகளை வாசித்தல், கவிதை, கட்டுரை, கதை எழுதுதல், பேச்சாற்றல், வினாடி வினா, பரதநாட்டியம், ஓவியம் வரைதல் போன்ற கலை–இலக்கியத்திறன்களில் குறிப்பிடத்தக்க பரிசு பெற்றவர்கள்;

ஆ) விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று மாவட்ட அளவில், மண்டல அளவில் மாநில அளவில் மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்று சான்றிதழ் பெற்றவ

இ) அறிவியல் மன்றம், அறிவியல் கண்காட்சி மற்றும் புத்தாக்க அறிவியல் ஆய் விருதுகள் போன்ற இதர அறிவியல் சார்ந்த நடவடிக்கைகளில் பங்குபெற்று மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் பரிசு பெற்றவர்கள்;

ஈ) 1. சாரண–சாரணியர்
2. சுற்றுச்சூழல் மன்றம்
3. நாட்டு நலப்பணித்திட்டம்
4. தேசிய மாணவர் படை
5. இளஞ் செஞ்சிலுவை சங்கம்
6. சாலைப்பாதுகாப்புக் குழு

இது போன்ற பள்ளி இணைச் செயல்பாடுகளில் பங்கேற்று பல்வேறு நிலைகளில் முகாம்களில் கலந்து கொண்டு விருது பெற்றவர்கள். மேற்கண்ட கலை இ விளையாட்டு, அறிவியல் மற்றும் இணைச் செயல்பாடுகள் நான்கிலும் தனி 10 விழுக்காடு என மொத்தம் 40 விழுக்காடு வழங்கலாம்.

ii. தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு எதிர்காலக் கல்வி நலனுக்கு பயன்படும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதமும் ரொ மற்றும் பாராட்டுச் சான்றிதழுடன்கூடிய விருது வழங்கலாம்.

iii. இதற்காக அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நி தலைமையாசிரியர்கள் திங்கள் பள்ளியின் சார்பில் 10 ஆம் வகுப்பு மாணவர்க 12ஆம் வகுப்பு மாணவர்களில், அவர்களின் கல்வி மற்றும் தனித்திறன் விவரங்களுடன் முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரை செய்து அனுப்ப ஒரு பள்ளியின் சார்பில் குறைந்தபட்சம் ஒருவர் அதிகபட்சம் 3 மாணவர்களின் பரிந்துரை செய்ய வேண்டும். அவ்வாறு பரிந்துரைக்கப்படும் மாணவர்களின் வி இதற்கென ஏற்படுத்தப்படும் தேர்வுக்குழு ஆய்வு செய்து, 10ஆம் வகுப்பு மாணவ பேரையும், 12ஆம் வகுப்பு மாணவர்களில் 20 பேரையும் தெரிவு செய்து அ பட்டியலை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். பெறப்படும் ப பள்ளிக்கல்வி இயக்குநரால் பரிசீலிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கான நிதி அரசிடமிருந்து பெற்று மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். முதன்

-3-

...வட்ட அளவில் கீழ்க்கண்ட அலுவலர்களை உள்ளடக்கிய குழு ஒன்றினை ஏற்படுத்தவும், இக்குழுவின் தேவையின் அடிப்படையில் ஒரு துணைக்குழுவை அமைத்து மாணவர்களை தெரிவு செய்யும் பணியினை மேற்கொள்ளலாம்;-

| வ. எண் | பதவி | பொறுப்பு |
|---|---|---|
| 1. | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2. | மாவட்டக் கல்வி அலுவலர்கள் | உறுப்பினர்கள் |
| 3. | மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் இருவர் | உறுப்பினர்கள் |
| 4. | உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் இருவர் | உறுப்பினர்கள் |
| 5. | கல்வியாளர்கள் இருவர் | உறுப்பினர்கள் |

vi. இந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தில் 10ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்புகளில், ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மாணவர்களைத் தேர்வு செய்து முறையே தலா ரூ.10,000/- மற்றும் ரூ.20,000/- அளிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

4. மேற்காணும் பள்ளி கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு, பரிசீலனைக்குப்பின்னர், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 10-ம் வகுப்பு (ம) 12-ம் வகுப்பில், கல்விச் செயல்பாடுகள் உள்ளிட்ட பிற தனித் திறன்கள் உடைய சிறந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழ் வழியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் ஒரு மாவட்டத்திற்கு 10ம் வகுப்பிலிருந்து 15 மாணவர்கள் அதே போல் 12ம் வகுப்பில் 15 மாணவர்கள் வீதம் தேர்ந்தெடுத்து மொத்தமுள்ள 32 மாவட்டங்களைச் சேர்ந்த 960 மாணவர்களுக்கு "பெருந்தலைவர் காமராஜர் விருது" வழங்க ஏதுவாக ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழுடன் சேர்த்து ரூ.1,45,30,000/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3(i)ல் சொல்லப்பட்டுள்ள கலை, இலக்கியம், விளையாட்டு மற்றும் இணைச் செயல்பாடுகள் நான்கிலும் தனித்தனியாக 10 விழுக்காடு என மொத்தம் 40 விழுக்காடு மதிப்பெண்கள் வழங்குவதற்கான மதிப்பீட்டுமுறை இவ்வரசாணையின் அட்டவணை 1-4-ல் உள்ளவாறு கணக்கிடப் படவேண்டும்.

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 107 படிப்புதவித் தொகை – மாநிலச் செலவினங்கள் – AC பெருந்தலைவர் காமராஜர் விருது – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 உதவித் தொகை.(து.தொ.கு. 2202 02 107 AC – 1296)

7. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

8. சம்பந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர் / கருவூல கணக்கு அலுவலர்கள் மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" ( NEW SERVICE) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும்.

மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செல நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பண அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வரவு செலவு பொது 1) துறையில் தனியாக பிறப்பிக்கப் அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவை விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963–ல் உள்ள அட்டவணை படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு செலவு பொது 1) துறை நேரடியாக அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017- ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ செலவு பொது 1) துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் க இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.38851/கல்வி –II/2017 நாள் 11.08.20 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1 (ஆயிரத்து நூற்று நாற்பத்து ஆறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை– 6
AAD / F & A Cell / Audit I & II
மாநிலக் கணக்காயர் (AAD / F & A Cell / Audit - I / II), சென்னை 18
மாநிலக் கணக்காயர் (AAD / F & A Cell / Audit - I / II), சென்னை –35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 35
கருவூலம் மற்றும் கணக்கு அலுவலர்,சென்னை –15

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
பள்ளிக் கல்வி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9
பள்ளிக் கல்வி (பட்ஜெட் மற்றும் என் பிரிவு)த் துறை, சென்னை 9
நிதிக் (கல்வி,II) துறை, சென்னை 9
நிதி (வ.செ/பொது –I/II) துறை, சென்னை 9
SF/SC

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்